1986 ஏப்ரல் 25]

படையில் கட்டப்படுகிறதா ? அல்லது வருவாயின் அடிப்படையில் கட்டப்படுறதா ? அப்படி போக்குவரத்தின் அடிப்படையில் கட்டப்படுகிறது என்றால், தலைநகராக இருக்கின்ற வேலூர், திருப்பத்தூர் பகுதியில் அதிகமான நெரிசல் இருக்கிறதே, அதற்கு ஏன் கட்டவில்லை? திருவண்ணாமலை, திண்டிவனம் ரோட்டில் உள்ள ரயில்வே மேம்பாலத்தை ஏன் கட்டவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ரயில்வே போக்குவரத்தினுடைய அந்த பயணத்தை பொறுத்துத்தான் இது கட்டப்படுகிறது. அந்த ரயில்வே பாதையில் குறைந்த பட்சம் 50 ஆயிரம் முறைக்கு மேலே ஒரு ஆண்டுக்கு ரயில்கள் கடந்து செல்லுமானால் அந்த இடத்திலே கட்டவேண்டும் என்று மத்திய அரசாங்கம் நிர்ணயம் வைத்திருக்கிறது. எனவே அதிக பட்சமாக எந்த இடத்திலே அப்படி இருக்கிறதோ, அங்கே இருந்து ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக கட்டிக்கொண்டு வருகிறார்கள். எனவே இவைகள் எல்லாம் முறையான நேரத்திலே நிச்சயமாக வரும் என்று கருதுகிறேன்.

அய்யம்பாளையம் தாண்டிக்குடி மலைச்சாலை.

562—(*வினா எண் 4684) **திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் அய்யம்பாளையத்தில் இருந்து தாண்டிக்குடி செல்லும் மலைச் சாலையை விரிவுபடுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அத்தகைய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் அய்யம்பாளையத்தில் இருந்து தாண்டிக்குடி செல்லும் மலைச் சாலையில் ஒவ்வொரு ஆண்டும் விபத்துக்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. எனவே இதற்கு முன்னுரிமை கொடுத்து, அவசர நடவடிக்கை எடுப்பதற்கு ஏதேனும் வழிவகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாதைகளை எல்லாம் விரிவுபடுத்தவேண்டும், அதைச் சரியாக பராமரிக்கவேண்டும் என்பது அவசரமான காரியமாகத்தான் இருக்கிறது. எனவே இதில் மிக அவசரம் எது என்பதைப் பார்த்து ஒரு பட்டியலைப் போட்டு நாம் காரியங்களைத் தொடர்ந்து

செய்து கொண்டு வருகிறோம். இதைப் பொறுத்தவரையில் 30 கி. மீட்டர் உள்ளது இந்தச் சாலை. இதிலே ஏறக்குறைய 3.7 மீட்டர் அகலத்திற்கு இந்தப் பாதை அமைந்திருக்கிறது. அதிலே வனத்துறையிடமிருந்து நாம் சில இடங்களைப் பெற வேண்டியிருக்கிறது. ஏறக்குறைய 153 லட்சம் செலவாகும் என்று கணக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து, அந்த வேலை எடுத்து கொள்ளப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதற்கு நிதி ஏதேனும் ஒதுக்கப்பட்டு உள்ளதா ? அப்படி இல்லை என்றால், வரும் ஆண்டிலாவது நிதி ஒதுக்குவதற்கு அரசிற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதுவரையில் ஒதுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் உத்தேசத்தைப் பற்றி யோசிக்கப்படும்.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மலைச்சாலைகளில் வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில் ஹைவேஸ் துறையினர் ரோடுகளைப் போடுகிறார்கள். அப்படிப் போடுகின்ற இடங்களில் வனத்துறையைச் சேர்ந்தவர்கள் செக்-போஸ்ட் போட்டு அதைத் தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் ஹைவேஸ்காரர்கள் டி. எப். ஓ. அவர்களிடம் இதற்கான பெர்மிஷன் வாங்கவேண்டும் என்றுசொல்கிறார்கள். குறிப்பாக தாளவாடி பகுதியில் உள்ள விவசாயிகள் அங்கே விளைகின்ற அந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல பெர்மிஷன் வாங்கவேண்டும் என்று சொல்கிற காரணத்தால், அவர்கள் மைசூர் சாம்ராஜ்க்கு சென்று விடுகிறார்கள். கர்நாடக அரசு இதற்கு என்று எந்த பெர்மிஷனும் கேட்பதில்லை. ஆகவே இதில் தனிக் கவனம் செலுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்படி மலைப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான ரோடுகளிலே இருக்கின்ற நெடுஞ்சாலைத்துறைக்கான பாதைகளில் எந்தவிதமான பெர்மிஷனும் வாங்கவேண்டியதில்லை என்பதற்கான அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாதை அமைப்பது, அதைப் பராமரிப்பது என்பதுதான் நெடுஞ்சாலைத் துறையினுடைய வேலை. இதிலே அதற்கு என்னென்ன பர்மிஷன் கொடுக்க வேண்டும், செக்-போஸ்ட் அதற்கு அமைக்கப்படவேண்டும் என்பதைப் பற்றி இந்தத் துறைக்குச் சம்பந்தம் இல்லை. அதைக் கேட்கவும் முடியாது. இது சம்பந்தப்பட்ட பிரச்சனை பற்றி, சம்பந்தப்பட்ட துறைக்கு எழுதிக்கேட்டால் நிச்சயமாக அரசு இதிலே நியாயமான முடிவை எடுக்கும்.